## திராவிட இயக்க இதழ்கள் – ‘ஜஸ்டிஸ்’



1916 -ஆம் ஆண்டு நவம்பர் 20 அன்று சென்னை வேப்பேரியில் பிராமணரல்லாத தலைவர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதன் விளைவாகப் பிறந்ததுதான் ‘தென்னிந்திய நல உரிமைச் சங்கம்’. அந்தச் சங்கத்தின் நோக்கங்களை, செயல்பாடுகளை மக்களுக்கு எடுத்துச் செல்ல அந்தச் சங்கத்தைச் சேர்ந்தோர், பத்திரிகைகள் நடத்த விரும்பினர். அதற்காக அவர்கள், உருவாக்கியதுதான் ‘தென்னிந்திய மக்கள் கழகம்’ எனும் அமைப்பு. அதன் மூலம் 1917-ஆம் ஆண்டு பிப்ரவரியில் கூட்டுப் பங்கு நிறுவனம் வழியாக, தலா 100 ரூபாய் மதிப்புள்ள 640 பங்குகளை விற்று பத்திரிகைகள் நடத்துவதற்கான முதலீடு திரட்டப்பட்டது.

அந்தத் தொகையைக் கொண்டுதான் ‘ஜஸ்டிஸ்’ எனும் ஆங்கில இதழ் தொடங்கப்பட்டது. பிறகு, இதழின் பெயரே கட்சியின் பெயராகவும் மாறியது. இதன் முதல் இதழ் 1917-ஆம் ஆண்டு பிப்ரவரி 26 அன்று வெளிவந்தது. இது நாளிதழாக வெளிவந்தது. இதழின் முகப்புப் பக்கத்தில் பல்வேறு நிறுவனங்களின் வரி விளம்பரங்கள் அச்சிடப்பட்டுள்ளன. இதழின் உள் பக்கங்களில் படங்களுடன் கூடிய விளம்பரங்கள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. இரண்டாம் பக்கத்தில் இருந்து செய்திகள் அச்சிடப்பட்டுள்ளன. உள்ளூர் செய்திகள் மட்டுமல்லாது, ‘அசோஸியேட்டட் பிரஸ்’, ‘ராய்ட்டர்’ போன்ற செய்தி முகமைகளிடமிருந்து வாங்கிய செய்திகளும் வெளியிடப்பட்டுள்ளன. இதழ் வெளிவந்த காலம் முதலாம் உலகப் போர்க் காலம் என்பதால், யுத்த செய்திகளே நிறைய இடம்பெற்றுள்ளன.

வாசகர் கடிதம், விளையாட்டுச் செய்திகள் ஆகியவற்றையும் உள்ளடக்கி, 12 பக்க நாளிதழாக ‘ஜஸ்டிஸ்’ இதழ் வெளி வந்திருக்கிறது. 1939-ஆம் ஆண்டு இந்த இதழின் கடைசி இதழ் வெளி வந்திருப்பதாக அறிய முடிகிறது.

## :ப்ளாஷ்பேக்





தமிழ்நெறி தங்கவேலு

### கிளைக் கழக வரவேற்பு!

1987-ஆம் ஆண்டு அன்றைய மாநில இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான அண்ணன் தளபதி அவர்கள், தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கழகத் தேர்தல் நிதி திரட்டினார்கள். அதன் தொடர்ச்சியாக ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், வேம்பத்தி வெள்ளாளப் பாளையம் என்ற எங்களது சிற்றூருக்கு வருகை தந்தார். அவரை எங்கள் கிளைக் கழகம் சார்பாக, மாலையிட்டு வரவேற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்த நிழற்படம் என்றும் மறக்கமுடியாத நிகழ்வாக என்னிடம் உள்ளது.

**– தமிழ்நெறி தங்கவேலு,**
**அந்தியூர் ஒன்றியம், ஈரோடு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தொடர் மாநாடுகள்!

1975-ஆம் ஆண்டு, நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்ட பின்னர், தொடர்ச்சியாக மாவட்டக் கழக மாநாடுகளை நடத்தினார் கலைஞர். ஆகஸ்ட் மாதத்தில் திருநெல்வேலியில் நெல்லை மாவட்ட ஐந்தாவது மாநாட்டையும், சேலத்தில் சேலம் மாவட்ட ஐந்தாவது மாநாட்டையும், அக்டோபரில் அறந்தாங்கியில் புதுக்கோட்டை மாவட்ட முதல் மாநாட்டையும், நவம்பரில் தி.மு.க மகளிர் மாநாடு மற்றும் நாகர்கோவிலில் குமரி மாவட்ட மூன்றாவது மாநாடு என்று தொடர்ச்சியாக, பல மாநாடுகளை நடத்தியது கழகம். அனைத்து மாநாடுகளிலும் நெருக்கடி நிலை எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முதன் முதலில் 23

# நாடு போற்றும் நலத்திட்ட விழாக்கள்!



**ந.வினோத்குமார்**

**திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் ‘திராவிட மரபு’ தொடர் இது...**

நம் கழகத் தலைவரோ, இளைஞர் அணிச் செயலாளரோ அல்லது அமைச்சர்களோ... ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டின் ஏதோ ஓர் இடத்தில் நலத்திட்ட விழாக்களில் கலந்து கொண்டு, மக்களுக்குத் தேவையானவற்றை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இதர கட்சிகள் ஆட்சியில் இருந்தால், தங்கள் புகழ் பாட பேருக்கு ஒன்றிரண்டு நலத்திட்ட விழாக்களை நடத்தும். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகமோ, ஆட்சியில் இருந்தாலும், இல்லாமல் போனாலும் நலத்திட்ட விழாக்களை ஏற்பாடு செய்து மக்களுடன் எப்போதும் தொடர்பில் இருந்து கொண்டே இருக்கும்.

நலத்திட்ட விழாக்கள் நடத்தும் மரபை, முதன்முதலில் தொடங்கி வைத்தது தி.மு.க.தான். கழகம் முதன்முதலாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததிலிருந்து நலத்திட்ட விழாக்கள் நடத்தப்படுகின்றன என்றாலும், ‘அவை ஏன் ஏற்பாடு செய்யப்படுகின்றன?’ என்பதற்கு நிர்வாக ரீதியான சிந்தனையை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1989-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 அன்று, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் நடைபெற்ற நலத்திட்டங்கள் வழங்கும் விழாவில் இவ்வாறு தெரியப்படுத்தினார்:

**சித்தாந்த ரீதியில் என்ன மாதிரியான நலத்திட்டங்களை, எவ்வாறு மக்களுக்குக் கொண்டு செல்கிறோம் என்பதுதான் அவற்றை வெற்றிபெறச் செய்கின்றன.**

“...நலிவுற்றவர்களுக்குப் பல நல்வாழ்வுத் திட்ட உதவிகளை வழங்குவதிலும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதிலும் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். 16 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் அறிவிக்கப்படுவதையும், ஒரு கோடி ரூபாயில் 2 ஆயிரம் பேர்களுக்கு உதவி அளிப்பதையும் இங்கு ஒரு விழாவாக நடத்துவது, விளம்பரத்திற்காக அல்ல. அரசு சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் ஏழை எளிய மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான்.

இன்றுகூட தலைமைச் செயலகத்திற்குச் செல்லும் போதும் சரி, திரும்பி வரும் போதும் சரி... ஆயிரக்கணக்கான மனுக்கள் என்னிடம் தரப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலானாவை ‘முதியோர் ஓய்வூதியம்’ இன்னும் கிடைக்கவில்லை’, ‘கர்ப்பிணிகளுக்கு உதவித் தொகை கிடைக்கவில்லை’, ‘18 வயது பூர்த்தி அடைந்த பல பெண்கள் திருமணம் செய்ய வழி இல்லாமல் அவதிப்படுகிறோம்’ என்பன போன்றவைகளாகும். அவர்கள் தலைமைச் செயலகம் வந்து மனுக்கள் தருவதற்குக் காரணம் அவர்கள் இன்னும் யாரை அணுகினால், அந்த உதவிகள் கிடைக்கும் என்பது தெரியாமல் இருப்பதுதான்.

இது போன்ற விழாக்கள் மூலம் அந்த ஏழை எளிய மக்கள் உதவிகளைப் பெற முடியும் என்பதால்தான், இதுபோன்ற விழாக்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுபோன்ற விழாக்கள் நடத்தப்பட்டு, அந்த விழாவில் அரசியல் கட்சியினர் அனைவரும் கலந்துகொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன” என்கிறார் கலைஞர்.

ஆம்... வெறுமனே நலத்திட்டங்களை அறிவிப்பதால், மட்டும் அவை வெற்றிபெற்று விடுவதில்லை. சித்தாந்த ரீதியில் என்ன மாதிரியான நலத்திட்டங்களை, எவ்வாறு மக்களுக்குக் கொண்டு செல்கிறோம் என்பதுதான் அவற்றை வெற்றிபெறச் செய்கின்றன. அந்தப் புரிதல் இல்லாததால்தான் இதர மாநிலங்களில் உள்ள இதர கட்சிகள் நலத்திட்டங்களை அறிவித்தும் அவை பலருக்கும் பயனளிக்காமல் போகின்றன..!

...அடையாளம் அறிவோம்.

பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** 23


# அரசியல் வாழ்க்கையே சொந்த வாழ்க்கை!

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

நினைத்ததை எழுதும் சுதந்திரம் தன்வரலாற்றுப் புத்தகங்களுக்கே உரியது. தன்வரலாறு எழுத தைரியமும், மனவலிமையும், அடக்கமும், மான அவமானங்களை ஒன்றுபோல அணுகும் பக்குவமும் வேண்டும். வரலாறு நம்மை எப்படி வேண்டுமானாலும் மதிப்பிடட்டும் என்ற உள்ள உறுதி உள்ளவர்களே சுயசரிதை எழுதுகிறார்கள்.

**புற நிகழ்வுகளுக்குக் கொடுத்த அதே முக்கியத்துவத்தை அக வாழ்க்கை நிகழ்வுகளான திருமணம், நண்பர்கள், உறவினர்கள் போன்றவற்றுக்கும் கொடுத்துள்ளார் கழகத் தலைவர்.**

இந்த வகையில், கழகத் தலைவர்-தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் எழுதிய தன் வரலாற்று நூலான ‘உங்களில் ஒருவன் பாகம்-1’ வடிவமைப்பிலும் உள்ளடக்கத்திலும் மாறுபட்ட ஒன்று. 336 பக்கங்களைக் கொண்ட இந்நூலை, பூம்புகார் பதிப்பகம் பதிப்பித்துள்ளது.




நூலில் குறிப்பிடப்படும் நிகழ்வுகளுக்கு இணையாகப் புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன. ஒரு நிகழ்வைப் படித்துவிட்டு, அது தொடர்பான புகைப்படத்தைப் பார்க்கும்போது அந்த நிகழ்வு குறித்த கற்பனை எளிதாக அமைந்து விடுகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் ‘நெஞ்சுக்கு நீதி’யில் ஓவியங்களைக் கொண்டு சம்பவங்களை விளக்கி இருப்பார். இந்தப் புத்தகத்தில் புகைப்படங்கள் அந்த இடத்தை நிரப்பியுள்ளன.

ஒவ்வொரு அத்தியாயத்தின் தொடக்கத்திலும் முதல்வர் கைப்பட எழுதிய சிறு குறிப்பொன்று இடம்பெற்றுள்ளது. புகைப்படங்களில் தொடங்கி, புகைப்படங்களுடன் முடிகிறது ஓர் அத்தியாயம்.

21-ஆம் நூற்றாண்டில் எழுதப்படும் தன் வரலாற்று நூல் என்பதால், அதற்கேற்றாற் போல் நவீனமாகியுள்ளது. புகைப்படங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் போல, நூல் வடிவமைப்பிலும் புதுமை மிளிர்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞரின் புதல்வர் என்பதால், பிறப்பு முதல் அனைத்து முக்கிய நிகழ்வுகளுமே அரசியல் நிகழ்வுகளாகவே இருந்துள்ளன. அரசியல் ஆளுமைகளை மிக இயல்பாகப் பார்த்தும் பழகியுமே அவர் வளர்ந்துள்ளார்.

அரசியல் வாழ்க்கைதான் அவருடைய வாழ்க்கையில் பிரதானமான நேரத்தையும் உழைப்பையும் எடுத்துக் கொண்டுள்ளது. நூலில் கலைஞர் பற்றிய செய்திகள் அதிகமாக இருக்கின்றன. அதற்குக் காரணம், தலைவரின் வாழ்க்கையில் கலைஞர் ஏற்படுத்திய தாக்கம்தான்.

புற நிகழ்வுகளுக்குக் கொடுத்த அதே முக்கியத்துவத்தை அக வாழ்க்கை நிகழ்வுகளான திருமணம், நண்பர்கள், உறவினர்கள் போன்றவற்றுக்கும் கொடுத்துள்ளார் கழகத் தலைவர்.

அடுத்த பாகம் மிசா கைதிலிருந்து தொடங்கும் என்று வாசகனை எதிர்பார்க்க வைக்கும் நடையிலேயே நூலை நிறைவு செய்துள்ளார். இந்த நூல் இன்றைய இளைஞர்களுக்காக எழுதப்பட்டது எனலாம். சமகாலத்தவர் அறிந்திருக்கும் வரலாற்றுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன என்றாலும், வாசிக்கும்போது சுவாரசியமும் ஆர்வமும் ஏற்படுகின்றன.


‘உங்களில் ஒருவன்’ பெயருக்கேற்ற வாசிப்பனுபவத்தை தரும் நூல், அவர் ‘நம்மில் ஒருவர்’ என உணர வைக்கும்.

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

561

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.